முருகப்பெருமான் துணை

**மகான் திருநாவுக்கரச நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**01.08.2022**, திங்கட்கிழமை

1. ஞானவாழ்வு தந்தருளும் அரங்கா
ஞானியாக வந்தருளும் தேசிகா
தானதர்ம பலம் உலகம் அடைய
தரணியெங்கும் அன்னதான சேவையாற்றும்
2. ஆற்றுகின்ற ஞானியே உன்பெருமை கூறி
அருளாசி தன்னை திருநாவுக்கரச நாயனாரும்
ஆற்றல்பட சுபகிருது நள்ளி திங்கள்
அறிவிப்பேன் மூவையோர் திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 16 நாள், 01.08.2022 திங்கட்கிழமை)
3. வாரமதில் உலகநலமுற உரைப்பேன்
வல்லமைபட அரங்கமகான் காட்டும்
அறநெறியாம் சுத்த சன்மார்க்க நெறியை
அகிலத்தார் பின்பற்றி வர இனிதே
4. வருகவே கலியுக மக்களுக்கு
வள்ளல் தன்மையோடு ஞானபலமும்
ஆறுமுகனார் ஆசியாக வந்தடையும்
ஆற்றல்பட உலக மாற்றத்தை நோக்கி
5. நோக்கியே செயல்பாடுகள் பெருகி
நிலவுலகம் நீதிமான்கள் தலைமையும்
ஆக்கமுடன் நல்ல நிர்வாக ஆளுமையும்
அதிகாரிகளின் தயவான செயல்பாடுகளுமாக
6. ஆகவே அற்புதங்கள் சடுதி கண்டு
அகிலமே ஞான ஆட்சிகாலம் பெறும்
வகைபட தொண்டர்கள் படையெனும்
வல்லமைமிக்க அரங்கன் படைகள் மூலமாக
7. ஆகவே உலகமெங்கும் மாற்றம்
ஆறுமுகனார் வெளிப்பாடாக உருவாகி
ஜெகமே ஞானயுகமாற்றம்
செப்பிடுவேன் அரங்கன் சேவையால் அடையக்கூடும்
8. கூடவே இந்தவித மாற்றத்திற்கு
குரு அரங்கன் ஓங்காரக்குடிலில் இருந்து
நாடெங்கிலும் பிரணவ சக்தியாகவும்
நாட்டிடுவேன் ஞானத்திருவடி நூலாகவும்
9. ஆகவுமே அற்புதங்கள் உலகமெங்கிலும்
ஆற்றலாக அனைத்துமாக இறங்கியே
ஜெகமெல்லாம் நல்லோர்கள் ஆட்சியாக
சித்திமிகு ஞானிகளின் ஆட்சியாக

10. ஆகவே முருகப்பெருமான் தலைமையை
அகிலமே கண்டடையக் கூடும்
வகைபட வரலாறு படைக்கும் விதமாக
வையகத்தை மீட்டு காக்கும் முகமாக

11. ஆகவே அரங்கஞானி அவதாரமிருக்க
அகிலம் அறிந்தால் போதுமப்பா
மிகைபட மாற்றம் உடனே காண்கும்
மொழிந்திட்ட அருளாசி முற்றும் முற்றே

–சுபம்–